# நமது தின கனி
காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 02 | Issue: 11 | 4 Pages | 11.8.2024 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 11 | 4 பக்கங்கள் | 11.8.2024 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


# தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## மத்திய மந்திரிக்கு முதல்அமைச்சர் கடிதம்

சென்னை, ஆக. 11

இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மத்திய வெளியுறவுத் துறை மந்திரி ஜெய்சங்கருக்கு முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இது தொடர்பாக முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தில்,

ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 35 மீனவர்கள்,அவர்களது நான்கு மோட்டார் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளில் மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில், இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் ஆழ்ந்த வேதனையும் கவலையும் அளிக்கிறது.

அண்மையில் இரண்டு மீனவர்கள் உயிரிழந்த நிலையில், மீனவர் பிரச்சினை தொடர்பாக வெளியுறவுத்துறை மந்திரி அவர்களை தமிழ்நாட்டிலிருந்து சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மீனவ சங்கப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் சந்தித்தனர். அதற்குப் பின்னரும் குறிப்பிடத்தக்க நிவாரணமோ தீர்வோ ஏற்படவில்லை . மீனவர்கள் தொடர்ந்து சிறைபிடிக்கப்படும் சம்பவங்களால், மீனவக் குடும்பங்கள் மிகுந்த துயரங்களுக்கு ஆளாவதோடு, கடலோர மீனவ சமுதாயத்தினரிடையே அச்ச உணர்வும், அவர்களது வாழ்க்கையில் நிச்சய




மற்ற தன்மையும் ஏற்பட்டுள்ளது. இதுபோன்ற கைது நடவடிக்கைகள் மீனவ குடும்பங்களின் மன நம்பிக்கையைகுலைத்து, பெருத்த நிதி சுமையை ஏற்படுத்தி, அவர்களது பாரம்பரிய மீன்பிடித் தொழிலை கடினமாக்கி உள்ளது.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களை உடனடியாக விடுவிப்பதை உறுதி செய்திடவும், இது போன்ற கைது சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்க நிரந்தரத் தீர்வை ஏற்படுத்திடவும் வலுவான தூதரக நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டியது இன்றியமையாததாகும். கடலோர மீனவ சமுதாயத்தினரின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளித்து, கைது செய்யப்பட்ட அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடி படகுகளையும் விடுவித்து, தாயகத்திற்கு அழைத்து வருவதை உறுதி செய்திட வேண்டும். என தெரிவித்துள்ளார்.

# பள்ளி மாணவர்களின் சண்டையை சாதி சண்டையாக பார்க்க கூடாது சபாநாயகர் அப்பாவு

நெல்லை, ஆக 11

முதல்அமைச்சர்மு.க.ஸ்டாலின் நேற்று கோவையில் 'தமிழ்ப் புதல்வன்' திட்டத்தை தொடங்கி வைத்தார். இதையொட்டி பாளையங்கோட்டை சேவியர் கல்லூரியில் நேற்று விழா நடைபெற்றது. இதில் சபாநாயகர் அப்பாவு கலந்துகொண்டு 'தமிழ்ப் புதல்வன்' திட்டத்தை தொடங்கி வைத்தார். அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயின்று கல்லூரிகளில் உயர்கல்வி படிக்கும் மாணவர்களுக்குமாதந்தோறும்ரூ.1,000 பெறுவதற்கான வங்கி பரிவர்த்தனைஅட்டைகளைவழங்கினார்.

பின்னர்நிருபர்களுக்கு பேட்டியளித்த சபாநாயகர் அப்பாவு கூறும் போது,

"பள்ளிகள் என்றாலே மாணவர்களிடையேசிறுசிறு பிரச்சினைகள் இருக்கத்தான் செய்யும். அவர்களுக்கு இடையிலான தகராறில் எந்த வன்மமும், இருக்காது. மாணவர்களின் சாதியை குறிப்பிட்டு செய்தி வெளியிடுவதை தவிர்க்கலாம். நெல்லையில் ஒரு சில பள்ளிகளில் மாணவர்களிடையே பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இதனை சாதிய பிரச்சி னையாக பார்க்க கூடாது.

பள்ளி வளாகத்துக்குள் நடக்கும் மாணவர்கள் பிரச்சினைக்கு தலைமை ஆசிரியர்கள் தலையிட்டு தீர்வு காண வேண்டும். இதுகுறித்து முதல்அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. நெல்லையில் எங்கும்




சாதி சண்டை கிடையாது" என்ற கூறினார்.

# வக்பு சொத்துக்களை இஸ்லாமியர்களிடமிருந்து பறிக்கும் சதி அரங்கேறி உள்ளது: வைகோ கருத்து

சென்னை, ஆக. 11

வக்பு வாரிய சொத்துகள் மீதான முடிவுகள் எடுக்கும் உரிமையை மாவட்ட கலெக்டருக்கு வழங்கியதன் மூலம், வக்பு சொத்துக்களை இஸ்லாமியர்களிடமிருந்து பறிக்கும் சதி அரங்கேறி உள்ளது என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ குற்றம்சாட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

"அரசியலமைப்புச் சட்டம் சிறுபான்மை மக்களுக்கு வழங்கியுள்ள உரிமைகளை ஒழித்துக் கட்டும் வகையில் வக்பு சட்டம் 1995 திருத்த மசோதாவை நாடாளுமன்றத்தில் பா.ஜ.க. அரசு தாக்கல் செய்திருக்கிறது.

வக்பு வாரியம் எதற்காக ஏற்படுத்தப்பட்டது? முஸ்லிம் செல்வந்தர்களும், முஸ்லிம் மன்னர்களும் தங்கள் கட்டுப்பாட்டில் இருந்த ஏராளமான சொத்துக்களைத் தானமாகக் கொடுத்தனர். இப்படிப்பட்ட சொத்துக்கள்தான் வக்பு வாரியத்தின் சொத்துக்கள் என்று சொல்லப்படுகின்றன.

இந்த சொத்துக்களிலிருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டு, முஸ்லிம் மக்கள் நலனுக்கான பணிகளை ஏழைஎளியோர் பயன்பெறும் வகையில் செய்ய வேண்டும் என்பதுதான் அடிப்படை நோக்கம்.

தானமாக வழங்கப்பட்ட இடங்களின் பராமரிப்பையும் கண்காணிப்பையும் வக்பு வாரியம் செய்தாலும், இடங்களை வழங்கிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களே பல காலமாகச் சொத்துக்களைப் பராமரித்து வந்தார்கள். அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தை வக்பு வாரியத்திடம் சேர்த்தார்கள். இப்படிச் சொத்துக்களைப் பராமரிப்போரை முத்தவல்லிகள் என்று குறிப்பிடுகின்றனர். இந்த முத்தவல்லிகளை அறங்காவலர்கள் என்றும் குறிப்பிடுகின்றனர்.



முத்தவல்லிகள் செயல்பாடுகளை முறைப்படுத்த 1954ல் உருவாக்கப்பட்டதுதான் வக்பு வாரியம். மத்தியமாநில அரசுகள் இணைந்து உருவாக்கியிருக்கும் இந்த வக்பு வாரியம், முஸ்லிம் பெரியவர்கள் இறைப் பணிக்காக வழங்கிய பெரும் சொத்துக்களைப் பராமரித்துக் கண்காணிக்கும் பொறுப்பை ஏற்றது.

நாடாளுமன்றத்தில் ஆகஸ்ட் 8ந்தேதி இஸ்லாமியரின் மத உரிமைகளைப் பறித்து அவர்களை இரண்டாம் தர குடிமக்களாக்குவதுடன், வக்பு சொத்துகளை அபகரித்து பறிக்கும் நோக்கத்துடன் நாடாளுமன்றத்தில் வக்பு சட்டம் 1995 (திருத்தம்) என்ற பெயரிலான மசோதாவை தாக்கல் செய்துள்ளது மோடி அரசு.

பொதுவாக ஏற்கெனவே உள்ள சட்டத்தில் திருத்தங்கள் என்றால் ஒன்று, இரண்டு முதல் 10 திருத்தங்கள் வரை மேற்கொள்வார்கள். ஆனால் 40 திருத்தங்களை மேற்கொள்ளப் போகிறோம் என்று அறிவித்து அதன் மூலம் அரசியலமைப்புச் சட்டம் இஸ்லாமிய மற்றும் சிறுபான்மை மக்களுக்கு வழங்கியுள்ள மத உரிமைகளை மோடி அரசு ஒழித்துக் கட்டியுள்ளது.

அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 25 வழங்கும் உரிமைகள் இஸ்லாமியர்களுக்கு பொருந்தாதா? மேலும் இத்திருத்தங்கள் மூலம் நாடு முழுவதிலும் வக்பு வாரியத்துக்கு சொந்தமான 7,85,934 சொத்துக்களைப் பறிமுதல் செய்து விருப்பம் போல் பயன்படுத்த பா.ஜ.க. அரசு முனைந்து இருக்கிறது.

வக்பு வாரியத்தில் இஸ்லாமியர் அல்லாத பிற மதத்தவர் மற்றும் பெண்களை உறுப்பினர்களாக நியமிக்க இச்சட்ட திருத்தம் முறை செய்கிறது. இதன் மூலம் வக்பு வாரிய சொத்துக்கள் மீது நடவடிக்கை எடுக்கும் உரிமையை இஸ்லாமியர் அல்லாதவருக்கு வழங்கியுள்ளது இந்த சட்ட திருத்தம்.

வக்பு வாரிய சொத்துகள் மீதான முடிவுகள் எடுக்கும் உரிமையை மாவட்ட கலெக்டருக்கு வழங்கியதன் மூலம், வக்பு சொத்துக்களை இஸ்லாமியர்களிடமிருந்து பறிக்கும் சதியும் அரங்கேறி உள்ளது. வக்பு வாரியத்திற்கும் அரசுக்கும் அல்லது தனி நபர்களுக்கும் இடையிலான சொத்து விவகாரத்தில் முடிவினை கூறக்கூடிய உரிமையை மாவட்ட கலெக்டருக்கு அளித்ததில் இருந்து வக்பு வாரிய சொத்துக்கள் இனி இஸ்லாமியரிடமிருந்து பறிக்கப்படுவதற்கான சட்டப்பூர்வமான வேலையை மோடி அரசு தொடங்கி இருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

இந்துத்துவக் கும்பலின் இஸ்லாமிய வெறுப்பும் வன்மமும், இந்து ராஷ்டிரிய கனவும் தகர்க்கப்பட்டே ஆக வேண்டும். மோடி அரசுக்கு ஆதரவு நல்கி வரும் நண்பர்களான ஆந்திரா முதல்மந்திரி சந்திரபாபு நாயுடு, பீகார் முதல்மந்திரி நிதிஷ் குமார் இருவரும், மத நல்லிணக்கத்தைச் சிதைத்து, நாட்டின் பன்முகத்தன்மையை ஒழித்துக்கட்டும் ஆர்.எஸ்.எஸ் பா.ஜ.க.வின் முயற்சிக்கு துணை போகக்கூடாது என்று வலியுறுத்துகிறேன்."

இவ்வாறு வைகோ தெரிவித்துள்ளார்.

## பெண் திருமண வயது 9: ஈராக்கில் மசோதா தாக்கல்



பாக்தாத், ஆக. 11

மேற்காசிய நாடான ஈராக்கில், தற்போது திருமண வயது, 18 ஆக உள்ளது. இதை, பெண்ணுக்கு 9 ஆகவும், ஆணுக்கு, 15 ஆகவும் குறைத்து, ஈராக் நாடாளுமன்றத்தில், அந்நாட்டு நீதித்துறை அமைச்சகம் மசோதா தாக்கல் செய்துள்ளது. இந்த புதிய மசோதாவில், குடும்ப விவகாரங்களில் முடிவெடுக்க, மத போதகர்கள் அல்லது நீதித்துறையை தேர்வு செய்ய குடிமக்களுக்கு வாய்ப்பு தரப்பட்டுள்ளது. இந்த மசோதா நிறைவேற்றப்பட்டால், அங்கு 9 வயது சிறுமியும், 15 வயது சிறுவனும் சட்டப் பூர்வமாக திருமணம் செய்து கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமிய மதச்சட்டத்தை தரப்படுத்தவும் தகாதஉறவுகளிலிருந்து இளம் பெண்களை பாதுகாக்கவும் திருமண வயது குறித்த புதிய மசோதா முயல்வதாக சொல்லப்படுகிறது. மேலும் இந்த மசோதா குழந்தை திருமணத்தை ஊக்குவிக்கும் என்றும்; குடும்ப விவகாரங்களில் நீதிமன்ற அதிகாரத்தை குறைத்து மதகுருமார்களின் கைஓங்கச் செய்யும் என்றும் அஞ்சப்படுகிறது.

இதனால் பெண்களின் சொத்துரிமை, வாரிசுரிமை மற்றும் விவாகரத்து கோரும் உரிமை பறிக்கப்படும் என்று ஈராக்கை சேர்ந்த பெண்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். கல்வி இடைநிற்றல் அதிகரிக்கும் அபாயம், இள வயதில் கர்ப்பம் தரித்தல், குடும்ப வன்முறை அதிகரிக்கும் ஆபத்து உள்ளிட்ட பிரச்சினைகள் குழந்தை திருமணத்தினால் ஏற்படும் என்று அவர்கள் எச்சரித்துள்ளனர்.

.........................................

## ஜப்பானில் மீண்டும் நிலநடுக்கத்திற்கு வாய்ப்பு: இந்தியர்களுக்கு தூதரகம் எச்சரிக்கை கடிதம்



டோக்கியோ, ஆக. 11

ஜப்பானில் மீண்டும் மிகவும் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் இந்தியர்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு டோக்கியோவில் உள்ள இந்திய தூதரகத்திற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.


நேற்று முன்தினம் ஜப்பானின் தெற்கு மாகாணத்தில் மியாசாகியில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது .இது ரிக்டர் அளவில் 6.9 ஆக பதிவானது. மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்ட போது 7:1 ஆக பதிவானது. இதையடுத்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. பின்னர் வாபஸ் பெறப்பட்டது.

இந்நிலையில் டோக்கியோவில் உள்ள இந்திய தூதரக அலுவலகத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில்,

ஜப்பானில் மீண்டும் சக்தி வாய்ந்த நிலநடுக்கத்திற்கு வாய்ப்புள்ளது. அந்நாட்டு அரசு இயற்கைப் பேரிடர்களுக்குத் தயார் நிலைக்கான ஆலோசனையை அறிவித்துள்ளது. எனவே ஜப்பானில் வசிக்கும் இந்தியர்கள் அனைவரும் அதிகாரிகள் அறிவிக்கும் ஆலோசனைகளைப் பின்பற்ற வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது இது தொடர்பாக கடிதம் எக்ஸ்' வலைதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

.........................................

## பிரேசிலில் 62 பேருடன் சென்ற விமானம் விழுந்து விபத்து



ரியோ, ஆக. 11

பிரேசிலின் சாவ் பாலோ மாநிலத்தில் வியோபாஸ் விமானமான 2283 என்ற விமானம் 62 பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்று கொண்டிருந்தது. வின்ஹெடோ நகரில் சென்று கொண்டிருந்த போது விமானம் நிலை தடுமாறு கீழே விழுந்து வெடித்ததை உள்ளூர் தீயணைப்புப் படை உறுதிப்படுத்தி உள்ளது.

நெதர்லாந்தைச் சேர்ந்த பிஎன்ஓ நியூஸ் என்ற செய்தி நிறுவனம் தனது சமூக வலைதளப்பக்கத்தில் வெளியிட்ட வீடியோவில், விமானம் நடுவானில்கட்டுப்பாட்டை இழந்துசுற்றுகிறது. பின்னர்வின்ஹெடோ நகரில் உள்ள வீடுகளின் மீது தலைகீழாக கவிழ்ந்து விழுந்தது. இதில் சில நொடிகளில் விமானத்தின் ஒரு பெரிய பகுதியில் தீப்பிடித்து எரிகிறது. பின்னர் விமானத்தில் இருந்து பெரிய கரும்புகை வானத்தை நோக்கி வெளியேறுவதாக உள்ளது.

பிஎன்ஓ நியூஸ் வெளியிட்ட செய்திகளின் படி, 62 பேர் சென்ற வியோபாஸ் 2283 என்ற விமானம் செங்குத்தாக கீழே விழுந்து வெடித்து சிதறி உள்ளது. அந்த இடமே தீப்பிழம்பாக மாறி உள்ளது. அதில்பயணம்செய்தஅனைவரும்உயிர்பிழைத்திருக்கவாய்ப்பில்லை என்று கூறப்படுகிறது. ஏனெனில் விமானம் வந்து விழுந்த வேகத்தில் வெடித்து சிதறியது. அதில் ஏற்பட்ட தீப்பிளம்பு காண்போரை கண்ணீரில் ஆழ்த்தி உள்ளது.

வியோ பாஸ் விமான நிறுவனம் வெளியிட்ட அறிவிப்பில், 58 பயணிகள் மற்றும் விமானிகள் உள்பட 4 பணியாளர்களுடன் சாவ் பாலோவின் சர்வதேச விமான நிலையமான குருல்ஹாஸ் நோக்கிச் சென்ற விமானம் விபத்துக்குள்ளானதாக உறுதிப்படுத்தியுள்ளது. விபத்துக்கான காரணம் என்ன என்று அறிக்கையில் கூறவில்லை.

இந்த விபத்து குறித்து அறிந்த பிரேசில் அதிபர் லூயிஸ் இனாசியோ லுலாடாசில்வா, ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார். தெற்குபிரேசிலில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற அவரிடம் விபத்து குறித்து தகவல் தெரிவித்த நிலையில், அங்கிருந்தவர்களிடம் ஒரு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்துமாறு கோரிக்கை வைத்தார். இந்த விபத்து குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

# வியாபாரிகள் கடையடைப்பு போராட்டம்



தென்காசி, ஆக. 11

தென்காசி மாவட்டத்தில் உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களில் ஒன்றான குற்றாலம் மெயின் அருவி அருகே இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள குற்றாலநாதர் கோவிலுக்கு சொந்தமான சுமார் 152 கடைகள் உள்ளன.

இந்த கடைகளானது பல வருடங்களாக குறிப்பிட்ட சில நபர்களிடம் உள்ள நிலையில், அவர்கள் மாதம் தோறும் கோவில் நிர்வாகத்திற்கு வாடகை செலுத்தி வந்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், ஒரு சில வியாபாரிகள் கொரோனா காலகட்டத்தில் வியாபாரம் இல்லாத நிலையில் வாடகை பாக்கி செலுத்தாமல் இருந்துள்ளனர்.

இதனால் வாடகை பாக்கி நிலுவையில் வைத்துள்ள கடை வியாபாரிகள் உடனடியாக வாடகை பாக்கி செலுத்த வேண்டும் எனவும், கடையின் சாவியை கோவில் நிர்வாகத்திடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் குற்றாலநாதர் கோவில் நிர்வாகத்தினர் தொடர்ந்து வற்புறுத்தி வந்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் கோவில் நிர்வாகத்தை கண்டித்து இன்று குற்றாலம் பகுதியில் வணிகர் சங்கம் சார்பில் முழு கடையடைப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வாடகை பாக்கி முழுவதையும் செலுத்தி விட்டாலும், கடை சுவாதீன உரிமம் ரத்து செய்யப்படும் என்ற அறிவிப்பை வாபஸ் பெற வேண்டும், வாரிசுதாரர்களையும், வாடகைதாரர்களாக ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு பெயர் மாற்றம் செய்து கொடுக்க வேண்டும் என்பது உள்பட 9 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த கடையடைப்பு போராட்டம் நடைபெற்றது.

விடுமுறை தினமான இன்று ஏராளமான சுற்றுலா பயணிகள் குற்றாலத்திற்கு வருகை தந்த வண்ணம் இருந்தனர். இந்நிலையில் கடையடைப்பு போராட் டத்தால் சுற்றுலா பயணிகள் பாதிக்கப்பட்டனர்.

கோவில் நிர்வாகம் தொடர்ந்து இந்த பிரச்சனைக்கு முடிவு கட்டாமல் இருந்தால் போராட்டங்கள் தொடர்ந்து நடத்தப்படும் எனவும் குற்றாலம் வியாபாரிகள் சங்கம் சார்பில் தெரிவித்து உள்ளனர்.

# திருப்பூரில் இன்று பா.ஜ.க. மாவட்ட தலைவர்களுடன் அண்ணாமலை ஆலோசனை



திருப்பூர், ஆக. 11

லண்டன் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் சர்வதேச அரசியல் படிப்புக்காக தமிழக பா.ஜ.க., தலைவர் அண்ணாமலை வருகிற 28ந்தேதி லண்டன் செல்ல உள்ளார். அதற்கு முன்னதாக நிர்வாகிகளை சந்தித்து ஆலோசனை நடத்த முடிவு செய்தார்.

இதையடுத்து திருப்பூரில் இன்று 11ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) பா.ஜ.க., மாவட்ட தலைவர்கள் கூட்டம் நடைபெறுகிறது. திருப்பூர் பெருமாநல்லூரில் உள்ள கிருஷ்ணா மஹாலில் காலை 11 மணிக்கு நடைபெறும் இந்த கூட்டத்திற்கு மாநில தலைவர் அண்ணாமலை தலைமை தாங்குகிறார்.

கூட்டத்தில் தமிழக பா.ஜ.க., மேலிட பொறுப்பாளர்கள் அரவிந்த் மேனன், சுதாகர் ரெட்டி ஆகியோர் கலந்து கொண்டு பேச உள்ளனர். மாநில நிர்வாகிகள், 66 மாவட்ட தலைவர்கள் மற்றும் மண்டல தலைவர்கள் பங்கேற்க உள்ளனர். கூட்டத்தில் நவம்பர் மாதத்தில் கட்சி நிர்வாகிகள் மாற்றம் தொடர்பான பணிகளை தொடங்குதல், கட்சியில் இளைஞர்களுக்கு வாய்ப்பு வழங்குதல் , கட்சி வளர்ச்சி, சுதந்திர தின கொண்டாட்டம், மத்திய பட்ஜெட் அறிவிப்புகளை மக்களிடத்தில் எடுத்து செல்வது, சட்டமன்ற தேர்தல் கூட்டணி மற்றும் வெற்றி பெற வியூகம் அமைப்பது உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

மேலும் அண்ணாமலை லண்டன் செல்ல உள்ள நிலையில் அதன்பிறகு கட்சியை எவ்வாறு நிர்வகிப்பது என்பது குறித்தும் ஆலோசனை நடத்தப்பட உள்ளது. எனவே நாளை நடைபெறும் இந்த கூட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. முன்னதாக நாளை காலை 830 மணிக்கு சுதந்திர தினத்தையொட்டி அண்ணாமலை தலைமையில் திருப்பூரில் தேசிய கொடி இரு சக்கர வாகன ஊர்வலம் நடக்கிறது. ஊர்வலம் திருப்பூர் குமரன் சிலை முன்பு இருந்து தொடங்கி, காந்திநகரில் உள்ள காந்தி அஸ்தி நினைவிடம் வரை நடக்கிறது. இதில் பா.ஜ.க. நிர்வாகிகள், தொண்டர்கள், பொது மக்கள் திரளாக பங்கேற்கின்றனர். இதற்கான ஏற்பாடுகளை திருப்பூர் வடக்கு மாவட்ட பா.ஜ.க. தலைவர் செந்தில்வேல் தலைமையில் நிர்வாகிகள் செய்து வருகின்றனர். மேலும் திருப்பூர் வரும் அண்ணாமலைக்கு உற்சாக வரவேற்பு அளிக்க திட்டமிட்டுள்ளனர்.

# லாட்ஜியில் திண்டுக்கல்லை சேர்ந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் தற்கொலை

புதுச்சேரி, ஆக. 11

திண்டுக்கல் மாவட்டத்தை சேர்ந்த சந்திரசேகர் என்பவர் தனது மனைவி, மகள், மகன் ஆகியோருடன் கடந்த 7ம் தேதி அன்று புதுச்சேரிக்கு சுற்றுலா சென்றுள்ளார். அங்கு பிரபல விடுதியில் தங்கியுள்ளனர்.

சுற்றுலாவை முடித்துக்கொண்டு இன்று விடுதியில் இருந்து வெளியேற இருந்த நிலையில் அவர்கள் 4 பேரும் அறையிலேயே விஷமருந்தி தற்கொலை செய்து கொண்டனர்.

இதுகுறித்து பெரிய கடை காவல்துறைக்கு விடுதில் உள்ளவர்கள் தகவல் தெரிவித்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் 4 பேரின் சடலத்தை கைப்பற்றி தீவிர விசாரணை நடத்தி வருகின்றன.

இவர்கள் தற்கொலை செய்து கொண்டதற்கு காரணம் கடன் பிரச்சனையா? இல்ல வேறு எது பிரச்சனையா? என்ற கோணத்திலும் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆம்ஸ்ட்ராங் கொலை எதிரொலி: மேலும் 23 போலீஸ் சூப்பிரண்டு பதவி உயர்வு

சென்னை, ஆக. 11

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவராக இருந்த ஆம்ஸ்ட்ராங் மரணம் எதிரொலியாக புளியந்தோப்பு போலீஸ் துணை கமிஷனர் ஈஸ்வரன் மாற்றப்பட்டுள்ளார். அவருக்கு பதில் துணை கமிஷனராக முத்துக்குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

கோவையில் கூடுதல் சூப்பிரண்டாக பணியாற்றிய முத்துக்குமார் பதவி உயர்வு பெற்று பணியமர்த்தப்பட்டுள்ளார். சென்னை சைபர்கிரைம் துணை கமிஷனராக ஈஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர்களை தவிர 23 கூடுதல் சூப்பிரண்டுகள் பதவி உயர்வு பெற்று சூப்பிரண்டாகியுள்ளனர்.

கள்ளக்குறிச்சியில் கூடுதல் சூப்பிரண்டாக பணியாற்றிய குத்தாலிங்கம் தி.நகர் துணை கமிஷனராகியுள்ளார். நெல்லையில் கூடுதல் சூப்பிரண்டாக பணியாற்றிய கார்த்திகேயன் தாம்பரம் பள்ளிக்கரணை துணை கமிஷனராக நியமிக்கப்பட்டுள்ளார்.

விழுப்புரம் லஞ்ச ஒழிப்பில் பணியாற்றிய தேவநாதன் பதவி உயர்வு பெற்று சென்னை லஞ்ச ஒழிப்பு சூப்பிரண்டாக நியமிக்கப்பட்டுள்ளார். கிருஷ்ணகிரி ஏ.டி.எஸ்.பி. சங்கு பதவி உயர்வு பெற்று கிருஷ்ணகிரி போச்சம்பள்ளி பட்டாலியன் சூப்பிரண்டாகியுள்ளார்.

இதே போன்று தமிழகம் முழுவதும் பதவி உயர்வு பெற்ற அதிகாரிகள் சூப்பிரண்டுகளாக பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

# மாடு மீது மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் வாலிபர் பலி

படப்பை, ஆக. 11

கடலூரை சேர்ந்தவர் தர்மதுரை(வயது29). இவர் மோட்டார் சைக்கிளில் ஸ்ரீபெரும்புதூரில் இருந்து குன்றத்தூர் நெடுஞ்சாலையில் நத்தம்பாக்கம் நோக்கி சென்றார். புதுநல்லூர் பகுதியில் வந்த போது மாடு ஒன்று திடீரென குறுக்கே வந்தது.

இதில் மாட்டின் மீது மோட்டார் சைக்கிள் மோதியது. கட்டுப்பாட்டை இழந்த தர்மதுரை மோட்டார் சைக்கிளோடு கீழே விழுந்தார். அந்த நேரத்தில் பின்னால் வந்த சிமெண்ட் கான்கிரீட் கலவை லாரி தர்மதுரை மீது மோதியது.

லாரியின் சக்கரத்தில் சிக்கிய தர்மதுரை உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே பலியானார். தகவல் அறிந்ததும் கூடுவாஞ்சேரி போக்குவரத்து புலனாய்வு போலீசார் விரைந்து வந்து பலியான தர்மதுரையின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு குரோம்பேட்டை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து லாரி டிரைவரிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். குன்றத்தூர் நெடுஞ்சாலையில் அதிக அளவில் மாடுகள் சுற்றி வருகின்றன. இதனால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு வருகிறது. மாடுகளை கட்டுப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வாகன ஓட்டிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

# நாளை விசைத்தறியாளர்கள் வேலை நிறுத்தம்



ஈரோடு, ஆக. 11

தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

அரசின் இலவசவேட்டி, சேலை உற்பத்தி திட்டத்தில் நடப்பாண்டு சேலை உற்பத்திக்கான காட்டன் பாவு நூலுக்கு பதில், பாலிஸ்டர் நூல் தருவதாக அறிவித்துள்ளனர். பாலிஸ்டர் நூல் கொண்டு தற்போது நடைமுறையில் உள்ள 'சைசிங்' மூலம் பாவு ஓட்ட இயலாது. கைப்பாவில் மட்டும் குறைந்த அளவு பாவு ஓட்ட முடியும்.

அனைத்து விசைத்தறிகளுக்கும் முழுமையாக பாவு நூல் வழங்க இயலாமல், விசைத்தறி நெசவாளர்கள் வேலை இழக்கும் அபாயம் ஏற்படும். உரிய நேரத்தில் உற்பத்தி செய்து,

பொங்கல் பண்டிகையின்போது பொதுமக்களுக்கு வழங்க முடியாத சூழல் ஏற்படும்.

வெளி மாநிலங்களில் சேலையை கொள்முதல் செய்யும் சூழல் ஏற்பட்டு, நெசவாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கும். இதனால் தமிழக அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும், காட்டன் நூல் மூலம் உற்பத்தி செய்ய வலியுறுத்தியும் நாளை மறுநாள் (திங்கட்கிழமை) காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்ய உள்ளோம்.

மேலும் அன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை ஈரோடு வீரப்பன்சத்திரம் பஸ் நிறுத்தம் பகுதியில் கவன ஈர்ப்பு உண்ணாவிரத கூட்டம் நடத்தவும் முடிவு செய்துள்ளோம். இந்த வேலை நிறுத்தம் மற்றும் உண்ணாவிரத போராட்டத்தில் ஈரோடு, சித்தோடு, லக்காபுரம், வீரப்பன்சத்திரம், திருச்செங்கோடு, தேவனாங்குறிச்சி, தோக்கவாடி, ராஜகவுண்டம்பாளையம், சூரியம்பாளையம், சடையம்புதூர், கொல்லப்பட்டி, நெசவாளர் காலனி, வெப்படை, பள்ளிபாளையம் உள்பட பல்வேறு பகுதிகளை சேர்ந்த விசைத்தறி நெசவாளர்கள் பங்கேற்கின்றனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஜார்க்கண்ட் முதல்வர் பிறந்தநாள்: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து




சென்னை, ஆக. 11

ஜார்க்கண்ட் மாநிலத்தின் முதல்வர் ஹேமந்த் சோரனுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளார். அவர் தனது எக்ஸ் தளத்தில்,

பல தடைகள் வந்தாலும் மக்களின் உரிமைக்கு போராடும் உத்வேகத்தை அசைக்க முடியாது என நிரூபித்தவர் ஹேமந்த் சோரன்.

குறையாத வலிமையுடனும் அர்ப்பணிப்புடனும் தொடர்ந்து முன்னேற ஹேமந்த் சோரனுக்கு வாழ்த்துகள் என்று தெரிவித்துள்ளார்.

# 33 மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும்: ஜி.கே.வாசன் வலியுறுத்தல்



சென்னை, ஆக 11

த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் பகுதியைச் சேர்ந்த 33 மீனவர்கள் 4 நாட்டு படகுகளில் கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த போது அப்பகுதிக்கு வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்களை கைது செய்து, அவர்களின் நாட்டு படகுகளையும் பறிமுதல் செய்தனர். இதனால் ராமநாதபுரம் மாவட்ட மீனவக் குடும்பத்தினர் கவலை அடைந்துள்ளனர்.

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையினரின் கைது நடவடிக்கையும், படகுகளை பறிமுதல் செய்வதும் தொடர்கிறது.

இதனால் தமிழக மீனவர்களின் மீன்பிடித் தொழில் சரிவர நடைபெறாமல், வருமானம் ஈட்ட முடியாமல் மிகுந்த சிரமத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்நிலை தொடரக்கூடாது.

எனவே மத்திய அரசு தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையினரின் கைது நடவடிக்கைக்கும், படகுகளை பறிமுதல் செய்வதற்கும் முற்றுப்புள்ளி வைப்பதற்கு உடனடிப் பேச்சுவார்த்தையை மேற்கொள்ள வேண்டும். மேலும் மத்திய அரசு தற்போது கைது செய்யப்பட்டுள்ள 33 தமிழக மீனவர்களையும், ஏற்கனவே இலங்கை வசம் உள்ள மீனவர்களையும் மற்றும் மீனவர்களின் படகுகளையும் மீட்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# தமிழ்ப்புதல்வன் திட்டம் சிறப்பானது வானதி சீனிவாசன்



கோவை, ஆக. 11

கோவை அரசு கலைக் கல்லூரியில் நடந்த தமிழ்ப்புதல்வன் திட்ட தொடக்க விழாவில் பங்கேற்ற கோவை தெற்கு தொகுதி எம்எல்ஏ வானதி சீனிவாசன் விழா மேடையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் சிறிது நேரம் பேசினார். பின்னர் அது குறித்து அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

தமிழ்ப்புதல்வன் நிகழ்ச்சியில் பங்கேற்றதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் என்னிடம் நன்றி கூறினார். தமிழ்ப்புதல்வன் திட்டம் மிகவும் நல்ல திட்டம். இந்த பணத்தை மாணவர்கள் போதை பழக்கத்திற்கு பயன்படுத்தாமல் இருந்தால் சிறப்பான திட்டம் தான்.

கோவை விமான நிலையம் மற்றும் எனது தொகுதிக்கு உட்பட்ட டவுன் ஹால், காந்திபுரம் பகுதியில் மல்டிலெவல் கார் பார்க்கிங் உள்பட தொகுதி சார்ந்த உள்கட்டமைப்பு பிரச்சினைகள் மற்றும் விமான நிலையம் விரிவாக்கம் தொடர்பாக பேசுவதற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் சந்திக்க நேரம் ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அதற்கு அவர் வந்து பாருங்கள் என்று சொன்னார்.

அதோடு வருகிற 18ம் தேதி மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் உருவம் பொறித்த 100 ரூபாய் நாணயம் வெளியீட்டு விழா நடைபெறுகிறது. இதில் அவசியம் கலந்துகொள்ள வேண்டும் என்று என்னிடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டார். அதற்கு நான் கட்சியில் சொல்கிறேன் என்று தெரிவித்தேன். இவ்வாறு அவர் கூறினார்.

# அமைச்சர் உதயநிதியை வரும் 19க்கு பிறகு துணை முதல்வர் என அழைக்க வேண்டும்: அமைச்சர் ராஜகண்ணப்பன் பேச்சு

ராமநாதபுரம், ஆக. 11

தமிழகம் முழுவதும் தமிழ்ப் புதல்வன் திட்டம் இன்று தொடங்கப்பட்டது. கோவையில் முதலமைச்சர் முக ஸ்டாலின் இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

இந்நிலையில், ராமநாதபுரத்தில் தமிழ்ப் புதல்வன் தொடக்க நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. இதில் அமைச்சர் ராஜகண்ணப்பன் பங்கேற்றுப் பேசினார்.

அப்போது அவர் பேசுகையில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் என கூறினார். உடனே, இப்போது சொல்லக்கூடாது. ஆகஸ்ட் 19ம் தேதிக்குப் பிறகு தான் அவர் துணை முதலமைச்சர் என விளக்கம் அளித்தார்.

இதையடுத்து, உதயநிதி ஸ்டாலின் வரும் 19ம் தேதி துணை முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்பாரா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

# மாநகராட்சிக்கு எதிராக போராட்டம் நடத்த அதிமுகவுக்கு அனுமதி உயர்நீதிமன்றம்



சென்னை, ஆக. 11

சென்னை மாநகராட்சிக்கு எதிராக வடசென்னையில் போராட்டம் நடத்த அதிமுகவுக்கு அனுமதி அளித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.


சென்னை மாநகராட்சியில் நிர்வாக சீர்கேடு உள்ளதாகவும், தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுள்ளதாக கூறி புதிய வண்ணாரப்பேட்டையில் உள்ள டி.எச். சாலையில் போரட்டம் நடத்த அனுமதி மறுத்ததை எதிர்த்து வடசென்னை அதிமுக நிர்வாகி கணேசன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நீதிபதி ஜி. ஜெயச்சந்திரன் முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது, காவல்துறை சார்பில் மனுதாரர் அனுமதி கேட்கும் இடத்தில் பொதுக்கூட்டங்களுக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்படும் எனவும் போராட்டங்களுக்கு அனுமதியில்லை எனவும் தெரிவித்தார்.

இதையடுத்து, மனுதாரர் கோரும் இடத்தில் போராட்டம் நடத்த அனுமதி அளித்து உத்தரவிட்ட நீதிபதி, ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் 10 மணி வரை என 30 நிமிடங்களுக்கு மட்டும் போராட்டம் நடத்தலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

# சென்னை சாலைகளில் கவனமாக செல்லுங்கள் ஆய்வில் அதிர்ச்சி தகவல்



சென்னை, ஆக. 11

சென்னைமாநகராசாலைகளில் நடத்தப்பட்ட ஆய்வில் ஆபத்தான சாக்கடை மூடிகள், வேகத் தடைகள் இருப்பது கண்டறியப் பட்டுள்ளன.

அறப்போர் இயக்கம் சார்பில் கடந்த 2 மாதங்களாகதன்னார்வலர்கள்100 பேர் சாலைகளில் மேற் கொண்ட ஆய்வில் 201 இடங்களில் ஆபத்தான வேகத் தடைகள் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

205 இடங்களில் சாக்கடை குழி மூடிகள் விபத்தை ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட் டிருப்பதும் தெரியவந்துள்ளது. வேகத் தடைகள் 10 செ.மீ. உயரம், 12 அடி அகலத்தில் தான் இருக்க வேண்டும் என்பது விதியாகும்.

ஆனால் 201 இடங்களில் இந்த விதிகளை மீறி வேகத் தடைகள் அமைக்கப்பட்டு உள்ளன. வேகத் தடை அமைக்கப்பட் டுள்ள இடங்களில் 40 மீட்டருக்கு முன்பாக வைக்கப்பட வேண்டிய அறிவிப்பு பலகைகளும் சாலையில் நிறுவப்படாமலே இருக்கிறது.

இதுபோன்ற காரணங்களாலேயே இந்த வேகத் தடைகள் உயிருக்கு ஆபத்தானவையாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதே போல் சாக்கடை குழி மூடிகள் மற்றும் சாலையில்உள்ளமழைநீர் வடிகால் குழிகளும் பல இடங்களில் சாலை அளவை விட கீழே உள்ளது. இந்த குழிகள் விபத்தை உருவாக்கும் குழிகளாக மாறியுள்ளன.

சாலை உயரத்தை அதிகரிப்பதும் இந்த மூடிகளை சாலை அளவில் வைக்காமல் அலட்சியமாக செயல் படுவதால் இந்த மூடிகள் சாலை உயரத்தைவிட அதிகமாகி விபத்துக்கு காரணமாகி உள்ளது.

இதே போன்று 61 இடங்களில் உள்ள சாக்கடை கால்வாய்களும் ஆபத்தானவை என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. இதுபற்றி அறப்போர் இயக்கம் சார்பில் தமிழக அரசுக்கு மனு அனுப்பப்பட்டுள்ளது.

முதலமைச்சர் மற்றும் மாநகராட்சி அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு உள்ள அந்த மனுவில் விபத்துக்கு காரணமாக இருக்கும் வேகத்தடைகள், சாக்கடை மூடிகள், கழிவுநீர் கால்வாய்களை சீரமைக்க வேண்டும் என்று கேட்டு கொள்ளப் பட்டுள்ளது.

# ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் பால்கனகராஜிடம் போலீசார் விசாரணை



சென்னை, ஆக. 11

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவராக இருந்த ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் இது வரை 22 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ரவுடி திருவேங்கடம் போலீஸ் என்கவுண்டரில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஆம்ஸ்ட்ராங் கொலையில்பா.ஜனதாவைசேர்ந்த பிரபல பெண் தாதா அஞ்சலை, அ.தி.மு.க.வைச் சேர்ந்த மலர்க்கொடி, த.மா.கா. வக்கீல் ஹரிகரன், இளைஞர் காங்கிரஸ் மாநில பொதுச் செயலாளரான அஸ்வத்தாமன் ஆகியோர் அடுத்தடுத்து கைது செய்யப்பட்டனர்.

ஆம்ஸ்ட்ராங் கொலை சம்பவத்தில்இது போன்று தொடர்ச்சியாக அரசியல் பிரமுகர்கள் சிக்கி வருவது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்த நிலையில் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் அதிரடி திருப்பமாக பாஜகவை சேர்ந்த முக்கிய நிர்வாகியான பிரபல வக்கீல் பால் கனகராஜிடம் போலீசார் இன்று விசாரணை நடத்தி உள்ளனர்.

பாஜக மாநில துணை தலைவராக உள்ள பால்கனகராஜ் பல்வேறு முக்கிய வழக்குகளில் ஆஜராகி வருகிறார். பாஜகவில் சேர்ந்து அரசியல் பணிகளில் ஈடுபட்டு வரும் பால் கனகராஜ் ரவுடிகள் சார்பிலும் ஆஜராகி வாதாடி இருக்கிறார்.

இந்த நிலையில் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் பிரபல ரவுடிகளானநாகேந்திரன், சம்பவ செந்தில் ஆகியோர் மீது போலீசார் குற்றம் சாட்டியுள்ளனர். இவர்களில் நாகேந்திரன் வேலூர் சிறையில் இருக்கும்நிலையில் சம்பவ செந்திலை போலீசார் தேடி வருகிறார்கள்.

இவர்கள் இருவருக்கும் பால்கனகராஜ் வக்கீலாக செயல்பட்டு இருப்பதாகவும், அதன் காரணமாக அவரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் போலீசார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அனுப்பப்பட்ட சம்மனை ஏற்று பால்கனகராஜ் இன்று எழும்பூரில் உள்ள ரவுடிகள்ஒழிப்புபிரிவுபோலீஸ் அலுவலகத்தில் ஆஜர் ஆனார். அவரிடம் பல் வேறு கேள்விகளை கேட்டு போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# மு.க.ஸ்டாலின் சொல்வதை தி.மு.க. கவுன்சிலர்களே கேட்பதில்லை எச்.ராஜா பேட்டி



பழனி, ஆக. 11


பழனி கோவிலில் பா.ஜ.க. மூத்த தலைவர் எச்.ராஜா சுவாமி தரிசனம் செய்தார். பின்னர் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

வங்கதேசத்தில் 20 சதவீத இந்துக்கள் இருந்த நிலையில் தற்போது 7 சதவீதமாக குறைந்துள்ளது. பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக பேசிய காங்கிரஸ், கம்யூனிஸ்டு, தி.மு.க.உள்ளிட்ட கட்சிகள் வங்கதேசத்தில் நடைபெறும் கலவரத்தில் அங்கு சிறுபான்மையினராக வாழும் இந்துக்கள் மீதும், அவர்களது வணிக நிறுவனங்கள், வீடுகள், கோவில்கள் மீதும் நடத்தப்படும் தாக்குதல் குறித்து எந்த கருத்தும் கூறாமல் மவுனமாக உள்ளனர்.

பா.ஜ.க. மட்டுமே உலகத்தில் உள்ள அனைத்து இந்துக்களுக்கும் ஆதரவான நிலையில் உள்ளது. கோவிலில் உள்ள தரிசன கட்டணத்தை ரத்து செய்ய வேண்டும். பழனியில் நடக்க உள்ள முத்தமிழ் முருகன் மாநாட்டுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டால் அவர் கோவிலுக்கு சென்று வழிபட்டு நெற்றியில் திருநீறு அணிந்து கொள்ள வேண்டும். திரை உலகை முதலமைச்சர் குடும்பத்தினர் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது போல கோவில்களை தி.மு.க. மயமாக்க அமைச்சர் சேகர்பாபு முயற்சி செய்வதை கண்டிக்கிறோம். தி.மு.க.வில் ஏற்பட்ட பிளவு மேயர் தேர்தலில் வெட்ட வெளிச்சமாக தெரிந்துள்ளது. முதலமைச்சர் சொல்வதை தி.மு.க. கவுன்சிலர்கள் கூட கேட்பதில்லை. கோவில் சொத்துக்களை ஆக்கிரமிப்புகளில் இருந்து மீட்க வேண்டும். கோவில் பணத்தில் கல்லூரிகள் கட்டி வருகின்றனர். கோவில் நிதியை மற்ற பணிகளுக்கு பயன்படுத்த கூடாது. கும்பாபிஷேகம் பக்தர்கள் நன்கொடையில்தான் நடக்கிறது. எனவே இந்து விரோதிகளிடம் இருந்து கோவில்களை காப்பாற்ற வேண்டும். இந்துக்களை வாக்கு அரசியலுக்காக மட்டுமே அரசியல் கட்சிகள் பயன்படுத்துகின்றனர். இந்து மதத்தில் பிளவை ஏற்படுத்தும் தி.மு.க.வின் ஜால்ராவாக ஆன்மீக சொற்பொழிவாளர் சுகிசிவம் உள்ளார்.

இவ்வாறு அவர் பேசினார்.

# அரசு டாக்டர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்க வேண்டும்: அன்புமணி வலியுறுத்தல்



சென்னை, ஆக. 11

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

தமிழக அரசு மருத்துவர்களின் கோரிக்கை மிகவும் எளிமையானது; நியாயமானது. 7வது ஊதியக்குழு பரிந்துரைப்படி மத்திய, மாநில அரசு மருத்துவர்களுக்கு வழங்கப்படும் தொடக்கநிலை ஊதியம் ரூ.56,100 என்ற ஒரே அளவு தான்.

ஆனால், மத்திய அரசு மருத்துவர்களுக்கு முறையே 4,9,13,20 ஆகிய ஆண்டுகளின் இறுதியில் வழங்கப்படும் காலம் சார்ந்த ஊதிய உயர்வும், பதவி உயர்வும் மாநில அரசு மருத்துவர்களுக்கு 8,15,17,20 ஆகிய ஆண்டுகளின் இறுதியில் தான் வழங்கப்படுகிறது.

இதனால் 14ம் ஆண்டில் தொடக்கத்தில் மத்திய அரசு மருத்துவர்கள் பெறும் அடிப்படை ஊதியமான ரூ. 1.23 லட்சத்தை, மாநில அரசு மருத்துவர்கள் 20வது ஆண்டில்தான் பெறுகின்றனர்; 14வது ஆண்டில் தமிழக அரசு மருத்துவர்களுக்கு ரூ.86,000 மட்டுமே கிடைக்கிறது. இந்த முரண்பாட்டை சரி செய்ய வேண்டும் என்பது தான் அரசு மருத்துவர்களின் கோரிக்கை ஆகும்.

கேரளம், கர்நாடகம், புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் அரசு மருத்துவர்களுக்கு மத்திய அரசு மருத்துவர்களுக்கு இணையான ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

அவர்களுக்கு இணையான கல்வித்தகுதியும், பணிச்சுமையும் கொண்ட தமிழக அரசு மருத்துவர்களுக்கும் அவர்களுக்கு இணையான ஊதியம் வழங்குவது தான் சரியானதாக இருக்கும்.

எனவே, சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பை செயல்படுத்தும் வகையில், மத்திய அரசு மருத்துவர்களுக்கு இணையாக, தமிழக அரசு மருத்துவர்களுக்கும் அவர்களின் பணிக்காலத்தின் 5,9,11,12 ஆகிய ஆண்டுகளில் ஊதிய உயர்வு வழங்க தமிழக அரசு முன்வர வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ளதால் வெள்ளத்தடுப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும்: ஓபிஎஸ் வலியுறுத்தல்



சென்னை, ஆக. 11

முன்னாள்முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழைதான் அதிகமாக பெய்யும் என்றாலும், சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழை காரணமாக பல இடங்களில் தண்ணீர் தேங்கியுள்ளது.

சாதாரண மழைக்கே இந்த நிலைமை என்றால், வடகிழக்கு பருவமழை ஆரம்பித்தால் என்ன நிலைமை உருவாகும் என்பதை நினைக்கவே அச்சமாக இருக்கிறது. இந்த நிலை நீடித்தால், சென்ற ஆண்டு போலவே இந்த ஆண்டும் பொதுமக்கள் வீடுகளை காலி செய்து படகுகள் மூலம் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லும் நிலைமை உருவாகும். எனவே, வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாகவே, அனைத்து வெள்ளத் தடுப்புப் பணிகளும் முடிக்கப்பட வேண்டுமென்றும், சென்ற ஆண்டு ஏற்பட்ட நிலைமை இந்த ஆண்டு ஏற்படக்கூடாது என்றும் பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

பொதுமக்களின் எதிர்பார்ப்பினைக் கருத்தில் கொண்டு, வெள்ளத் தடுப்புப் பணிகள் உட்பட அனைத்துப் பணிகளையும் முன்கூட்டியே முடித்து, ஆங்காங்கே தோண்டப்பட்டுள்ள பள்ளங்களை மூடவும், மெட்ரோ ரெயில் பணி நடைபெறும் இடங்களில் பெயர் பலகைகளை வைத்து, அங்குள்ள பள்ளங்களை இரும்பினால் ஆனதட்டிகளைகொண்டு மறைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# பொதுமக்களுக்கு கோயில்களில் தரிசனம் செய்ய தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகமும் இந்து சமய அறநிலைதுறையும் இணைந்து பேருந்து வசதி



நெல்லை, ஆக. 11

தமிழகத்தில் சுற்றுலாத்துறை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன் தொடர்ச்சியாகவே தற்போது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகமும் இந்து சமய அறநிலைத்துறையும் இணைந்து மிகவும் பிரசித்தி பெற்ற அம்மன் கோவில்களில் தரிசனம் செய்யும் வகையில் ஆடி அம்மன் தொகுப்பு சுற்றுலா பேருந்துகளை கடந்த ஜூலை 17ஆம் தேதி முதல் இயக்கி வருகின்றனர். சென்னை, தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, மற்றும் திருநெல்வேலி ஆகிய மண்டலங்களை தலைமையிடமாக கொண்டு ஆடி மாத அம்மன் திருக்கோயிலுக்கு ஆன்மிகப் பயணம் மேற்கொள்ள விரும்பும் மூத்த குடிமக்கள் விண்ணப்பிக்கலாம் என தமிழக அரசு அறிவித்துள்ளது. மூத்த குடிமக்களை இலவச ஆன்மிக சுற்றுலாவில் அழைத்து செல்வது தொடர்பாக தமிழக அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு வெளியிட்ட அறிக்கையில், 20242025 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலைத்துறை மானியக் கோரிக்கையின்போது, "ஆடி மாதத்தில் பிரசித்தி பெற்ற அம்மன் திருக்கோயில்களுக்கும், புரட்டாசி மாதத்தில் பிரசித்தி பெற்ற வைணவத் திருக்கோயில்களுக்கும் 60 முதல் 70 வயதிற்கு உட்பட்ட, தலா 1,000 பக்தர்கள் அழைத்து செல்லப்படுவர். இதற்கான செலவினத் தொகை ரூ.50 இலட்சம் அரசு நிதியாக வழங்கப்படும்" என தெரிவிக்கப்பட்டது. குமரி மாவட்டத்தில் அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயில், கன்னியாகுமரி, அருள்மிகு இசக்கியம்மன் திருக்கோயில், முப்பந்தல், அருள்மிகு ஒன்றுவிட்ட நங்கையம்மன் திருக்கோயில், சுசீந்திரம், அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயில், மண்டைக்காடு, அருள்மிகு சாமுண்டியம்மன் திருக்கோயில்,குழித்துறை ஆகிய கோயில்கள் அடங்கும். ஏற்கனவே 3 வார ஆடி வெள்ளிக்கிழமைகளில், இந்த சுற்றுலா பயணம் முடிந்து, இன்று டன் இப்பயணம் நிறைவு பெற்றது.

தமிழ்நாடு ஓட்டலில் காலை உணவுடன் தேர்வு செய்யப்பட்ட 38 பயணர்களுடன் பயணம் துவங்க, குமரி மாவட்ட அறங்காவலர் குழுத்தலைவர் பிரபா ஜி ராமகிருஷ்ணன், திருநெல்வேலி மண்டல இணை ஆணையர் கவிதா பிரியதர்ஷினி, சுசீந்திரம் இணை ஆணையர் பழனிக்குமார் இணைந்து கொடியசைத்து துவக்கி வைத்தனர். நாகர்கோயில் உதவி ஆணையர் தங்கம், பகவதி அம்மன் கோயில் மேலாளர் ஆனந்த், திமுக அணிகளின் துணை அமைப்பாளர்கள் ஜென்சன் ரோச், நிசார், ஒன்றிய துணைச் செயலாளர் மாணிக்க செல்வகுமார் உட்பட அதிகாரிகள் உடனிருந்தனர்.

மத்திய அரசு பட்ஜெட்டில் தமிழகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படாததை கண்டித்தும் நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தியும்

# திருப்பூரில் ஒருங்கிணைந்த மாவட்ட மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்




திருப்பூர், ஆக. 11

கடந்த சில தினங்களுக்கு முன்பு வெளியிடப்பட்ட மத்திய பட்ஜெட்டில் தமிழகத்திற்கு நிதி ஒதுக்கப்படாததை கண்டித்தும், மருத்துவ மாணவர்களின் கனவை சிதைக்கும் வகையில் உள்ள நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தியும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒருங்கிணைந்த மாவட்டத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டமானது ரயில் நிலையம் அருகில் உள்ள குமரன் சிலை முன்பு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில அவைத்தலைவர் ஆடிட்டர் அர்ஜுன்ராஜ் தலைமையில் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மத்திய அரசு தமிழ்நாட்டை மாற்றான் தாய் போல வழி நடத்துகிறது என்றும், தமிழகத்திற்கு நிதி ஒதுக்காததை கண்டித்தும், மருத்துவ மாணவர்களின் கனவை சிதைக்கும் மத்திய அரசுக்கு எதிரான கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் ஆர்ப்பாட்டத்தில் மாநகர் மாவட்ட செயலாளர். நாகராஜ்,புறநகர் வடக்கு மாவட்ட செயலாளர். புத்தரச்சல்மணி, புறநகர் வடக்கு மாவட்ட பொருளாளர். ஆர்.ஆர். ரவி,தெற்கு மாவட்ட செயலாளர் தமிழரசு, மகளிர் அணியின் மாநில துணைச் செயலாளர் சாந்தாமணி, மாநகர துணை செயலாளர்கள் குமார், வழக்கறிஞர் தமயந்தி பல்லடம் நகர செயலாளர் வைகோ பாலு, காங்கேயம் நகரச் செயலாளர். வெங்கடேஷ், அவிநாசி நகர செயலாளர், சுப்பிரமணி, தம்பி கோவிந்தராஜ் ஒன்றிய செயலாளர். சந்திரமூர்த்தி உட்பட 500க்கும் மேற்பட்ட மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்...

# மூளைச்சாவு அடைந்த வாலிபரின் உடல் உறுப்புகள் தானம்



சங்ககிரி, ஆக. 11

சேலம் மாவட்டம் சங்ககிரி அருகே மோரூர் மேற்கு கிராமம் வேங்கிபாளையம் சென்னாயக்கன்காடு பகுதி சேர்ந்த நெசவு தொழிலாளி பழனிசாமி அவரது மனைவி அனிதா தம்பதியின் மகன் கவின் (வயது 21).


இவர் டெக்ஸ்டைல்டிப்ளமோ படித்துவிட்டு நாமக்கல் மாவட்டம் வெப்படை பகுதியில் உள்ள தனியார் நூற்பாலையில் பணிபுரிந்து வந்தார். இந்நிலையில் கவினுக்கு திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டு ஈரோடு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். அங்கு தீவிர சிகிச்சை பிரிவில் இருந்த கவின் மூளைச்சாவு அடைந்தார்.

அதனையடுத்து பெற்றோர்தனது மகனின் உடல் உறுப்புகளை தானம் செய்தனர். உடல் உறுப்பு தானம் செய்யப்பட்ட கவின் உடலானது சென்னாயக்கன்காடு பகுதியில் உள்ள மயானத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு சங்ககிரி தாசில்தார் வாசுகி தலைமையில் அரசு மரியாதை செலுத்தப்பட்டு கவின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

அப்போது மோரூர் மேற்கு ஊராட்சி மன்ற தலைவர் கலாமோகன் ராஜ், வருவாய் ஆய்வாளர் மலர்விழி, கிராம நிர்வாக அலுவலர் முனியப்பன் உட்பட பலர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023
11.8.2024

# ஜூனியர் என்.டி.ஆரின் 31வது பட பூஜை





ஜூனியர் என்டிஆர், பிரசாந்த் நீல் கூட்டணியில் உருவாகும் புதிய படத்தின் ரிலீஸ் தேதி குறித்த அப்டேட் வெளியாகியுள்ளது.

நடிகர் ஜூனியர் என்.டி.ஆர், ராஜமவுலியின் ஆர்.ஆர்.ஆர் திரைப்படத்தில் நடித்து பிரம்மாண்ட வெற்றி கண்டார். கொரட்டலா சிவா இயக்கத்தில் உருவாகும் தேவரா எனும் திரைப்படத்தில் நடித்துள்ளார். இந்த படத்தின் படப்பிடிப்பு கடந்த சில மாதங்களாக நடைபெற்று வரும் நிலையில் தற்போது படத்தின் பின்னணி வேலைகள் மிக தீவிரமாக நடைபெற்று வருகின்றன. தேவரா படமானது வருகின்ற செப்டம்பர் 27ம் தேதி உலகம் முழுவதும் வெளியாக இருக்கிறது. ஹிருத்திக் ரோஷனின் 'வார் 2' படத்தில் ஜூனியர் என்.டி.ஆர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க உள்ளார்.

இதற்கிடையில் ஜூனியர் என்டிஆர், கே. ஜி.எப் படத்தின் இயக்குனர் பிரசாந்த் நீல் இயக்கத்தில் புதிய படம் ஒன்றில் நடிப்பதற்கு ஒப்பந்தமானார். இந்த படமானது ஜூனியர் என்.டி.ஆரின் 31வது படமாகும்.

ஆக்சன் நிறைந்த கதை களத்தில் உருவாகும் இந்த படத்தை மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனமும் நந்தமுரி தரகா ராமாராவ் ஆர்ட்ஸ்நிறுவனமும்இணைந்துதயாரிக்கிறது. இந்தபடத்தின்பூஜைஇன்றுசிறப்பாகநடைபெற்றுள்ளது. இந்நிலையில் என்.டி.ஆர்.நீல் (NTRNEEL) என்று சொல்லப்படும் இந்த படம் 2026 ஜனவரி 9ம் தேதி உலகம் முழுவதும் திரைக்கு கொண்டு வரப்படும் என்று பட குழுவினர் புதிய போஸ்டர் ஒன்றை வெளியிட்டு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளனர்.

# 'அமரன்' டப்பிங் பணியில் நடிகை சாய் பல்லவி



பிரேமம் படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமானவர் சாய் பல்லவி. அல்போன்ஸ் புத்திரன் இயக்கிய இப்படம் ஹிட்டானது. தமிழகத்தில் இந்தப் படம்200நாட்களுக்குமேல்ஓடிமிகப்பெரியவெற்றியைப் பெற்றது. இதில் சாய் பல்லவி நடித்த 'மலர் டீச்சர்' கதாபாத்திரம் ஏராளமான ரசிகர்களை கவர்ந்தது. முதல் படத்திலேயே சாய் பல்லவிக்கு சிறந்த நடிகை என்று பெயர் கிடைத்ததை தொடர்ந்து தமிழ் படத்தில் நடிக்க வாய்ப்புகள் கிடைத்தன.

தற்போது, சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக அமரன் படத்தில் சாய் பல்லவி நடித்துள்ளார். இந்த படத்தின் பெரும்பாலான காட்சிகள் காஷ்மீரில் படமாக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், நடிகை சாய் பல்லவி மும்பையில் இப்படத்தின் டப்பிங் பணிகளில் ஈடுபட்டுள்ளார். இது குறித்து அவர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஸ்டோரி பகிர்ந்திருக்கிறார்.

அமரன் படம் தீபாவளியை முன்னிட்டு அக்டோபர் மாதம் 31ம் தேதி திரைக்கு வரவுள்ளது. அமரனை தொடர்ந்து சாய் பல்லவி, நாக சைதன்யா ஜோடியாக தண்டேல் படத்திலும், ராமாயணம் படத்தில் சீதையாகவும் நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'விடாமுயற்சி' படத்தின் புதிய போஸ்டர் வைரல்



தென்னிந்திய திரையுலகின் முன்னணி நடிகரான அஜித், துணிவு படத்தை தொடர்ந்து 'விடாமுயற்சி' படத்தில் நடித்து வருகிறார். மகிழ்த்திருமேனி இயக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். லைகா நிறுவனம் இப்படத்தை தயாரிக்கிறது. இந்த படத்தில் அர்ஜுன், திரிஷா, ரெஜினா, சந்தீப் கிஷன், ஆரவ் உள்ளிட்டோர் நடித்து வருகின்றனர். தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் 'விடாமுயற்சி' வெளியாகிறது. சமீபத்தில் அஜர்பைஜானில் நடந்துவந்த 'விடாமுயற்சி' படத்தின் படப்பிடிப்பு முடிந்ததாக படக்குழு தெரிவித்தது. அதனைத்தொடர்ந்து, இப்படத்தின் போஸ்டர்கள் தொடர்ந்து வெளியாகி வருகின்றன. சமீபத்தில் அர்ஜுனின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியானது. இந்நிலையில், விடாமுயற்சி படத்தின் புதிய போஸ்டர் ஒன்று வெளியாகியுள்ளது. அதன்படி, ஆரவ்வின் பர்ஸ்ட் லுக் போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. தற்போது இந்த போஸ்டர் வைரலாகி வருகிறது. முன்னதாக ஆரவ், கலகத்தலைவன், சைத்தான், ஓ காதல் கண்மணி, சிந்துபாத், மார்க்கெட் ராஜா எம்.பி.பி.எஸ் உள்ளிட்ட படங்களில் நடித்திருக்கிறார். இதில் மார்க்கெட் ராஜா எம்.பி.பி.எஸ் படத்தில் கதாநாயகனாகவும் கலகத்தலைவன் படத்தில் வில்லனாகவும் நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'ஆவேஷம்' படத்தின் தெலுங்கு ரீமேக் பாலகிருஷ்ணா மறுப்பு



பகத் பாசில் நடிப்பில் மலையாளத்தில் வெளியாகி ஹிட் அடித்த ஆவேஷம் படம் தெலுங்கில் ரீமேக் ஆக உள்ளதாகவும் அதில், நந்தமுரி பாலகிருஷ்ணா நடிப்பதாகவும் கடந்த இரு தினங்களுக்கு முன்பு தகவல் பரவியது.

இந்நிலையில், நடிகர் பாலகிருஷ்ணா இப்படத்தில் நடிக்க தான் கையெழுத்திடவில்லை என கூறி தகவலுக்கு மறுப்பு தெரிவித்துள்ளதாகவும் மற்ற தெலுங்கு நடிகர் யாரிடமும் இப்படத்தில்நடிப்பது குறித்து யாரும் பேசவில்லைஎன்றும்கூறப்படுகிறது.

தற்போது , நடிகர் பாலகிருஷ்ணா என்பிகே 109, பிபி4 ஆகிய படங்களில் பிசியாக நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. ஜித்து மாதவன் இயக்கத்தில் மலையாளத்தில் உருவான 'ஆவேஷம்' திரைப்படம் கடந்த ஏப்ரல் மாதம் 11ம் தேதி திரையரங்குகளில் வெளியானது. இப்படம் பாக்ஸ் ஆபிஸில் ரூ.150 கோடிக்கு மேல் வசூல் செய்துஇந்தஆண்டின்பிளாக்பஸ்டர் படங்களில் ஒன்றாக உள்ளது. இத்திரைப்படத்தில் பஹத் பாசில், பூஜா மோகன்ராஜ், சஜின் கோபு உள்ளிட்ட பலர் நடித்தனர். இந்த படம் தற்போது ஓ.டி.டி தளங்களில் பல்வேறு மொழிகளில் வெளியாகி உள்ளது.

# விமல் நடித்த 'போகுமிடம் வெகுதூரமில்லை' படத்தின் ரிலீஸ் தேதி வெளியீடு





விமல் நடிக்கும் 'போகுமிடம் வெகுதூரமில்லை' பர்ஸ்ட்லுக் வெளியானது. பசங்க, களவாணி திரைப்படம் மூலம் மக்களை கவர்ந்தவர் நடிகர் விமல். தொடர்ந்து தூங்கா நகரம், வாகை சூடவா உள்ளிட்ட படங்கள் நல்ல வரவேற்பை பெற்றது. ஆரம்ப காலகட்டத்தில் கில்லி, கிரீடம் போன்ற திரைப்படங்களில் துணை வேடங்களில் நடித்த விமல், பாண்டிராஜ் இயக்கத்தில் வெளியான 'பசங்க' படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமானார்.

மீனாட்சிசுந்தரம் என்ற கதாபாத்திரத்தில் விமல் நடித்த அப்படம் அவருக்கு நல்ல ஒரு வரவேற்பை பெற்றுக்கொடுத்தது. இது சிறந்த திரைப்படத்திற்கான தேசிய விருதையும் பெற்றது. விமல் நடித்த 'வாகை சூடவா' திரைப்படமும் சிறந்த தமிழ் படத்திற்கான தேசிய விருதையும் பெற்றது. கடந்த 20 ஆண்டுகளில் தேசிய விருது பெற்ற படங்களில் அதிகம் நடித்த ஒரே தமிழ் நடிகர் விமல். அவர் நேரடியாக தேசிய விருதை பெறவில்லை என்றாலும் அவர் நடித்த படங்கள் மதிப்புமிக்க தேசிய விருதை பெற்றுள்ளது.

கிட்டதட்ட 3 ஆண்டுகள் பட வாய்ப்பு இல்லாமல் இருந்துவந்த விமல், அதன் பிறகு வெப் சீரிசிலும் நடித்தார். இதற்கிடையில் நடிகர் விமல், போஸ் வெங்கட் இயக்கும் 'சார்' எனும் படத்திலும் நடித்துள்ளார்.

இதனையடுத்து, விமல் மற்றும் கருணாஸ் நடிப்பில் 'போகுமிடம் வெகுதூரமில்லை' என்ற திரைப்படம் உருவாகியுள்ளது. இந்த படத்தில் நாயகியாக மெரி ரிக்கெட்ஸ் நடித்துள்ளார். மேலும், கருணாஸ், ஆடுகளம் நரேன், பவன், அருள்தாஸ், தீபா சங்கர், வேல ராமமூர்த்தி உள்ளிட்ட பலர் பலர் நடித்துள்ளனர்.

மைக்கேல் கே.ராஜா இயக்கத்தில் உருவாகியுள்ள இப்படத்தின் ரிலீஸ் தேதியை படக்குழு புது போஸ்டரை வெளியிட்டு அறிவித்துள்ளது. இப்படம் ஆகஸ்ட் 23ம் தேதி திரையரங்கில் வெளியாகிறது/

# ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம் வென்று தாயகம் திரும்பிய இந்திய ஆக்கி அணியினர்



பிரான்ஸ்நாட்டின்பாரீஸ்நகரில்ஒலிம்பிக்போட்டிகள் நடந்துவருகின்றன.இதில்,ஆண்கள்ஆக்கிபோட்டியில் அரையிறுதியில் தோல்வி அடைந்த இந்தியாவும், ஸ்பெயினும் இன்று வெண்கல பதக்கத்துக்கான ஆட்டத்தில் விளையாடின.

இந்த போட்டியில், இந்திய அணி ஸ்பெயினை 21 என்ற புள்ளி கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றுள்ளது. இதன் மூலம் தொடர்ந்து 2வது முறையாக இந்திய ஆக்கி அணி வெண்கல பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளது.

இந்நிலையில் பாரீஸ் ஒலிம்பிக்கில் வெண்கல பதக்கம் வென்ற இந்திய ஆக்கி அணியினர் இன்று தாயகம் திரும்பியுள்ளனர். அவர்களுக்கு டெல்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

# ஐ.பி.எல். 2025: மெகா ஏலம் குறித்து வெளியான புதிய தகவல்... ரசிகர்கள் மகிழ்ச்சி




அடுத்த ஆண்டு (2025) ஐ.பி.எல்.தொடருக்கான மெகா ஏலம் இந்த ஆண்டு நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு ஒவ்வொரு அணியிலும் ஏராளமான மாற்றங்கள் நடந்து வருகின்றன. இதனையொட்டி ஐ.பி.எல். நிர்வாகம் மற்றும் அணிகளின் உரிமையாளர்கள் பங்கேற்ற ஆலோசனை கூட்டம் மும்பையில் சமீபத்தில் நிறைவடைந்தது.

இதில் அனைத்து ஐ.பி.எல். அணிகளின் உரிமையாளர்களும் கலந்து கொண்டனர். அந்தக் கூட்டத்தில் அணி உரிமையாளர்களுக்கு மத்தியில் காரசாரமான விவாதம் நடந்ததாக தெரிய வந்துள்ளது. அப்போது பெரும்பாலான அணிகள் 4க்கு பதிலாக 7 வீரர்களை தக்க வைக்க கோரிக்கை வைத்தன. அத்துடன் பெரும்பாலான அணிகள் மெகா ஏலத்திற்கு பதிலாக சிறிய ஏலம் நடத்துவதை விரும்புவதாக தெரிய வந்துள்ளது.

இந்த சூழ்நிலையில் சமீபத்தில் வெளிவந்துள்ள தகவலின் படி, ஐ.பி.எல். நிர்வாகம் ஒவ்வொரு அணியும் ஆறு வீரர்களை ஒரு அணி தக்க வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. ஆறு வீரர்களைதக்கவைத்துக்கொள்ளஅனுமதி அளித்து இருப்பதோடு ஏலத்தின்போது ஆர்டிஎம்கார்டு மூலம் வீரர்களை திரும்பவும் வாங்கி கொள்ளலாம் என்றும் ஐ.பி.எல். நிர்வாகம் அறிவித்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் சில ஐ.பி.எல். உரிமையாளர்கள் மெகா ஏலம் நடைபெறக் கூடாது என்று கூறப்பட்டு வரும் நிலையில் மெகா ஏலம் இந்த ஆண்டு இறுதியில் நிச்சயமாக நடைபெறும் என்று ஐ.பி.எல். நிர்வாகம் அறிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னதாக ஒரு அணி 5 அல்லது 6 வீரர்களை தக்க வைத்துக்கொள்ள அனுமதி அளித்தால் மட்டுமே தோனி அடுத்த ஆண்டு சென்னை அணிக்காக விளையாடுவார் என்று கூறப்பட்டது.

தற்போது வெளிவந்துள்ள இந்த தகவலால் சென்னை ரசிகர்கள் மகிழ்ச்சியில் திளைத்துள்ளனர்.

# ரோகித் இல்லை... சுழற்பந்து வீச்சுக்கு எதிராக அவர்தான் சிறந்த பேட்ஸ்மேன் பாக். முன்னாள் கேப்டன்



இலங்கைக்கு எதிராக நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெட் தொடரை 27 வருடங்கள் கழித்து இந்தியா இழந்தது. 3 போட்டிகள் கொண்ட அந்த தொடரில் முதல் போட்டி சமனில் முடிந்திருந்த நிலையில் 2 மற்றும் 3வது போட்டிகளில் இலங்கை வெற்றி பெற்று தொடரை கைப்பற்றி வரலாறு படைத்தது.

இந்த தோல்விக்கு சுழலுக்கு சாதகமான கொழும்பு மைதானத்தில் இலங்கை ஸ்பின்னர்களை இந்திய பேட்ஸ்மேன்கள் சிறப்பாக எதிர்கொள்ளாதது முக்கிய காரணமானது. குறிப்பாக கேப்டன் ரோகித் சர்மாவை தவிர்த்து விராட் கோலி உள்ளிட்ட மற்ற பேட்ஸ்மேன்கள் சுமாராக விளையாடி தோல்விக்கு காரணமானார்கள்.

அத்துடன் இந்திய வீரர்கள் தங்களுடைய சொந்த மண்ணில் சிறிய மைதானங்களில் பிளாட்டான பிட்ச்சில் விளையாடப் பழகி விட்டதாக இலங்கை வீரர் தீக்ஷனா கூறினார். அதனால் சுழலுக்கு சாதகமான மைதானத்தை அமைத்து இந்தியாவை தாங்கள் தோற்கடித்ததாகவும் தீக்ஷனா வெற்றிக்குப்பின் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் வருங்காலங்களில் சுழலுக்கு சாதகமான பிட்ச்களில் இந்திய பேட்ஸ்மேன்கள் தடுமாறுவதை தவிர்க்க பி.சி.சி.ஐ. பிட்ச்களை தரமானதாக மாற்றியமைக்க வேண்டுமென பாகிஸ்தான் முன்னாள் கேப்டன் சல்மான் பட் தெரிவித்துள்ளார். அத்துடன் ரோகித் சர்மா போன்ற மற்ற வீரர்களை காட்டிலும் சூர்யகுமார் யாதவ் ஸ்பின்னர்களை சிறப்பாக எதிர்கொள்ளக்கூடிய இந்திய பேட்ஸ்மேனாக திகழ்வதாகவும் அவர் பாராட்டியுள்ளார்.

இது பற்றி அவர் பேசியது பின்வருமாறு:"முதலில் இந்தியா தங்களது பிட்ச்களில் இருக்கும் பிரச்சினையை தீர்க்க வேண்டும். ஏனெனில் சுழலுக்கு சாதகமான பிட்ச்களில் அவர்களது பேட்ஸ்மேன்கள் பிரச்சினையை கொண்டுள்ளனர். அது போன்ற சூழ்நிலைகளில் டாஸ் முக்கியமாகிறது. குறிப்பாக டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்வது எளிதாகவும் சேசிங் செய்வது கடினமாகவும் இருக்கிறது. முதல் இன்னிங்சில் வீரர்கள் ஓடுவதால் தேயும் பிட்ச் 2வது இன்னிங்ஸில் பேட்டிங் செய்வதற்கு இன்னும் கடினமாகிறது.

தற்சமயத்தில் இந்திய மிடில் ஆர்டரில் சூர்யகுமார்தான் ஸ்பின்னர்களை எதிர்கொள்ளக்கூடிய சிறந்த பேட்ஸ்மேனாக இருக்கிறார். குறிப்பாக அவர் ஸ்வீப், இன்சைட் அவுட் போன்ற ஷாட்டுகளை சிறப்பாக விளையாடி ஸ்பின்னர்களை நன்றாக எதிர்கொள்வார். அவரை இலங்கைத் தொடரில் தேர்வு செய்யாதது தவறான முடிவாக அமைந்தது. அவரைப் போன்ற பேட்ஸ்மேன்தான் ஒருநாள் கிரிக்கெட்டில் உங்களுக்கு 5 அல்லது 6வது இடத்தில் தேவை" என்று கூறினார்.


# பகலிரவு டெஸ்ட் போட்டிக்கு தயாராக இந்திய அணிக்கு பயிற்சி ஆட்டத்தை அறிவித்த ஆஸ்திரேலிய வாரியம்



இந்திய கிரிக்கெட் அணி வரும் நவம்பர் மாதம் ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் (பார்டர் கவாஸ்கர் தொடர்) ஆட உள்ளது. பார்டர் கவாஸ்கர் டெஸ்ட் தொடர் இந்த முறை 5 ஆட்டங்கள் கொண்ட தொடராக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

அதன்படி இந்த தொடரின் முதல் ஆட்டம் பெர்த்தில் நவம்பர் 22ம் தேதி தொடங்குகிறது. 2 வது போட்டியான பகல் இரவு டெஸ்ட் போட்டி அடிலெய்டு ஓவல் மைதானத்தில் டிசம்பர் 6ம் தேதி தொடங்குகிறது. 3வது போட்டி டிசம்பர் 14ம் தேதி பிரிஸ்பேன் மைதானத்திலும், 4வது போட்டியான பாக்ஸிங் டே டெஸ்ட் டிசம்பர் 26ம் தேதி மெல்போர்ன் மைதானத்திலும், 5வது டெஸ்ட் போட்டி அடுத்தஆண்டுஜனவரி3ம்தேதிசிட்னிமைதானத்திலும் தொடங்குகிறது. முன்னதாக 2020/21 பார்டர்காவஸ்கர் கோப்பை தொடரில் அடிலெய்டு நகரில் நடைபெற்ற முதல் போட்டி பகலிரவு போட்டியாக பிங்க் நிற பந்தில் நடைபெற்றது. ஆனால் அதற்கு முழுமையாக தயாராகாமல் களமிறங்கிய இந்தியா 36 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இருப்பினும் அங்கிருந்து மீண்டெழுந்து கடைசியில் தொடரை வென்று அசத்தியது.

இந்நிலையில் தற்போது நடைபெற உள்ள பகலிரவு டெஸ்ட் போட்டிக்கு இந்திய அணி தயாராக உதவும் வகையில் பயிற்சி போட்டி நடைபெறும் என்று ஆஸ்திரேலிய வாரியம் அறிவித்துள்ளது. அதன்படி முதல் டெஸ்ட் போட்டி முடிவடைந்த பின், நவம்பர் 30 டிசம்பர் 1 ஆகிய தேதிகளில் கான்பெரா நகரில் ஆஸ்திரேலிய பிரதமர் லெவன் அணியுடன் இந்திய அணி பகலிரவு பயிற்சி போட்டியில் விளையாடும் என்று அந்நாட்டு வாரியத்தின் இயக்குனர் நிக் ஹாக்லி அறிவித்துள்ளார்.



**ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லாற்**

**பொன்றாது நிற்பதொன் றில்**

**விளக்கம்:**

**உயர்ந்த புகழ் அல்லாமல் உலகத்தில் ஒப்பற்ற ஒரு பொருளாக அழியாமல் நிலைநிற்க வல்லது வேறொன்றும் இல்லை.**

**நமது தினகனி**
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
**94436 99066**
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.